# திராவிட மாடல் அரசு 32

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**





## வெற்றியாளர்களை உருவாக்கும் சிற்பிகள்..!

விளையாட்டில் பதக்கமோ கோப்பையோ வெல்வது விளையாட்டு வீரர்களின் கனவு மட்டு மல்ல. அது அவர்களின் பெற்றோர், கல்வி நிறுவனம், பணிபுரியும் நிறுவனம், தங்கள் மாவட்டம், மாநிலம், நாடு எனப் பலரின் கனவும்கூட.

இவ்வளவு பேரின் கனவுகளைத் தங்கள் தோள் மீது சுமந்துகொண்டு களம் காணும் வீரர்களுக்குத் திறமை மட்டும் இருந்தால் போதாது. அந்தத் திறமையை மேலும் மெருகூட்டி, அவர்களின் உடலை வளப்படுத்தி, மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சிகள் தேவை.

அந்தப் பயிற்சிகளை அவை குறித்த அறிவும் அனுபவமும் கொண்ட பயிற்றுநர்களால்தான் வழங்க முடியும். அற்புதமான திறமைகள் இருந்தும் அத்தியாவசியமான பயிற்சிகள் இல்லாத காரணத்தால் வாய்ப்புகளைத் தவறவிட்ட, வாழ்க்கையை வீணடித்த வீரர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.



கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அந்த நிலை மிக தீவிரமாக இருந்தது. கழக அரசு பொறுப் பேற்றதும் விளையாட்டு வீரர்களின் அந்த நிலையை முழுமையாக மாற்ற திட்டமிட்டது. பொறுப் பேற்ற முதல் ஆண்டிலேயே வேலைகள் தொடங்கின. காலியிடங்களில், எந்த ஒரு சிபாரிசு, ஊழல் உள்ளிட்ட பின்வாசல் முறைகளைக் கிஞ்சிற்றும் நினைத்துப் பார்க்காமல் தகுதி, திறமை, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு, புதிய பயிற்றுநர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.





### பயிற்றுநர் வேண்டிய 18 விளையாட்டுகள்!

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பயிற்றுநர் தேவை உள்ள, 18 வகையான விளையாட்டுகளில் இந்தக் காலியிடங்கள் இருந்தன. அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள 139 நிரந்தரப் பயிற்றுநர் பணியிடங்களில், காலியாக உள்ள 87 நிரந்தரப் பயிற்றுநர் பணியிடங்களை நிரப்பி புதிதாகப் பொறுப்பேற்றதும் நம் கழக அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

தொடர்ந்து, 2022-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அனைத்து நாளிதழ்களிலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணைய தளத்திலும் அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் 530-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாகப் பெறப்பட்டன.

முதல் நிலைத் தேர்வில், 225 விண்ணப்பதாரர்கள் தகுதி பெற்றனர். அவர்களில் இரண்டாம் நிலைத் தேர்வில் 189 பேர் தேர்வாயினர். மூன்றாம் நிலைத் தேர்வில் 76 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

#### என்னென்ன விளையாட்டுகளுக்கு நியமனம்?

தடகளம் (20), வில்வித்தை (1), கூடைப்பந்து (7), குத்துச்சண்டை (3), கையுந்துபந்து (3), கால்பந்து (5), வாள் சண்டை (3), ஜிம்னாஸ்டிக்ஸ் (2), கைப்பந்து (6), ஹாக்கி (7), ஜூடோ (2), கபடி (4), நீச்சல் (6), டேக்வாண்டோ (1), டென்னிஸ் (2), பளுத் தூக்குதல் (2), மல்யுத்தம் (1), வூஷூ (1)

ஆண் பயிற்றுநர்கள் : 50

பெண் பயிற்றுநர்கள் : 26

#### எந்தெந்த மாவட்டங்கள்?

நாமக்கல், கன்னியாகுமரி, சென்னை, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், பெரம்பலூர், சிவகங்கை, ஈரோடு, புதுக்கோட்டை, கரூர், தஞ்சாவூர், மதுரை, தூத்துக்குடி, வேலூர், திண்டுக்கல், திருநெல்வேலி, கடலூர், ராமநாதபுரம், திருச்சி, அரியலூர், விழுப்புரம், தேனி, தர்மபுரி, நாகப்பட்டினம்

#### ஊதியம் எவ்வளவு?

மாதம் ரூ. 55,852

### நிரந்தரப் பயிற்றுநர் நியமனம்

அரசு விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி தகுதி பெற்ற 18 விளையாட்டுக்களுக்கான 76 பயிற்றுநர்களும், நிரந்தரப் பயிற்றுநர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

அவர்களுக்கான பணி நியமன ஆணைகளை நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 2023 மார்ச் 17-ஆம் தேதி வழங்கிச் சிறப்பித்தார்.

கடந்த 2012 -ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதாவது 11 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் நிரந்தரப் பயிற்றுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவர்கள் அனைவரும் தமிழ்நாடு முழுவதும் உள்ள விளையாட்டு-உண்டு-உறைவிடப் பள்ளிகளில் பணியாற்றி, அங்குள்ள வீரர்களுக்கு அனைத்து விதமான போட்டிகளில் பங்கேற்கப் பயிற்சிகளை வழங்குவார்கள்.

இந்தச் சிற்பிகள் எண்ணற்ற வெற்றியாளர்களை உருவாக்கட்டும். தமிழ்நாடு பதக்கங்களைக் குவிக்கட்டும்.!

...சாதனை தொடரும்

## இந்துத்துவர்கள் உருவாக்கும் ஆபத்து!



திருப்தா தியாகி, உத்தரப் பிரதேசத்தின் முஸாஃபர் நகரில் உள்ள பள்ளி ஒன்றின் ஆசிரியை. இஸ்லாமியச் சிறுவன் ஒருவனைத் தண்டிக்கிறார். அதுவும் எப்படி? ஒவ்வொரு இந்து மாணவனையும் அழைத்து, அவனை அடிக்கச் சொல்கிறார். வேகமாகவே அறைந்த ஒருவனிடம்கூட “ஏன் இவ்வளவு மெதுவாக அடிக்கிறாய்? வேகமாக அடி” என்கிறார். அவனும் முதுகில் பலமாக அடிக்கிறான். “ஒவ்வொரு முஸ்லிம் மாணவனும் இதுபோல அடிக்கப்பட வேண்டும் என்று நான் பிரகடனம் செய்கிறேன்” என்கிறார்.

மாணவன் செய்த குற்றம் என்ன? வாய்ப்பாடு மறந்துவிட்டானாம்!


மாணவனின் தந்தை, “இதுகுறித்துப் போலீசில் புகார் செய்யப்போவதில்லை. பையனை பள்ளியிலிருந்து விலக்கிக் கொள்கிறேன்” என்று சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்குச் சிறுபான்மைச் சமூகம் அச்சத்தில் இருக்கிறது.

இதுபோன்ற ஆசிரியர்கள் என்ன விதைக்கிறார்கள்? இந்த ஆசிரியர்கள் கற்றுக் கொடுப்பதிலிருந்து உந்துதல் பெறும் மாணவர்கள் என்னவாக உருமாறுவார்கள்? பா.ஜ.க. நாட்டைப் பிடித்த சாபக்கேடு. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பா.ஜ.க. ஆட்சியிலிருந்து விரட்டியடிக்கப்படாவிட்டால் நாடு முழுவதும் மணிப்பூராக மாறுவதைத் தடுக்க முடியாது.

-எழுத்தாளர் ஷாஜகான் முகநூல் பதிவு

## ஃப்ளாஷ்பேக்





சிவா-தேவி

### திருமணமும் திட்டமும்!

1998-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 அன்று தளபதி தலைமையில், எனக்கும் எனது இணையர் தேவி அவர்களுக்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. அப்போது சென்னை மாநகராட்சி மேயராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த இன்றைய கழகத் தலைவர் அவர்கள் எனது திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து விட்டு, இராணிப்பேட்டையில் **‘அண்ணா மறுமலர்ச்சி’** திட்டத்தையும் தொடங்கி வைத்தார். கட்சிப் பணிக்கும் ஆட்சிப் பணிக்கும் இடையில் தொண்டனின் திருமண விழாவிலும், அவர் பங்கேற்று வாழ்த்தியது இன்றைக்கு நினைத்தாலும் வியப்பை ஏற்படுத்துகிறது.

**-வ.ஏ.சிவா, ஒன்றிய இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், ஆரணி, திருவண்ணாமலை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண் டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சில ஏடுகளும் - கலைஞரும்...

**1972-ஆம் ஆண்டு பத்திரிகைகள் மீது கடும் விமர்சனத்தை முன்வைத்தார் தந்தை பெரியார். “நம் நாட்டில்தான் இந்தப் படியான பத்திரிகைத் தொழிலில் மகா-மகா-மகா அயோக்கியர்கள் இருக்கிறார்கள். பொது மக்கள் தங்கள் இனத்தின் கேட்டுக்காக நடத்தப்படுகிற பத்திரிகைகளைப் படிப்பது எவ்வளவு மானங்கெட்ட ஈனத்தனம் என்பதை வலியுறுத்திக் காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்” எனச் சில பத்திரிகைகளைச் சாடினார். பெரியாரின் உணர்வுகளை, அண்ணாவின் லட்சியங்களை அடித்தளம் சிதையாதவாறு செயல்படுத்திடும் கழகத்தை அழிக்கத் துடிக்கும் சில ஏடுகளை, பெரியார் துணைகொண்டு எதிர்கொண்டவர் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 223




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131